**இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 2021 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, அதிகார சபையின் 2021 டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் (இ.க.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு கருதினால்

அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பில் அதிகாரசபையின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுகள் தயாரித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் மூலம் அனுமதி வழங்கப்பட்ட சந்தர்ப்பம் நீங்கலாக வருமானத்திற்கு செலவினங்கள் ஈடுசெய்யக் கூடாத போதிலும் 05 வருமான விடயங்களுக்குரியதாக ரூபா 53,382,820 கூட்டுத்தொகையான வருமானத்திலிருந்து ரூபா 23,917,086 கூட்டுத்தொகையான செலவினங்கள் ஈடுசெய்யப்பட்டு தேறிய வருமானம் ரூபா 29,465,734 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இந்த வருமானங்கள் மற்றும் செலவினங்களை தனித்தனியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 14 ஆம் பிரிவு மற்றும் 7 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபைக்குரிய 29 காணிகளின் பெறுமதிகளை | இதுவரையிலும் இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகாரசபைக்கு சொந்தமான 28 காணித் துண்டுகளை மதிப்பீடு செய்யும் பணிகளுக்கு தேவையான | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடு செய்து கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல்களுடன் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த அறிக்கை கிடைத்தவுடன் கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண உருப்படிகளின் நியாயப் பெறுமதி ஒவ்வொரு 03 வருடங்களுக்கு அல்லது 05 வருடங்களுக்கு ஒரு தடவை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதிகார சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் 2008 ஆம் ஆண்டின் பின்னர் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது காணிகள் மற்றும் கட்டிடங்கள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டவாறு உள்ளதுடன் அப்பணிகள் நிறைவடைந்தவுடன் கணக்குகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். தங்க நாணயங்கள் தொடர்பில் 2020 ஆம் ஆண்டில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் 2022 ஆம் ஆண்டில் அந்த தங்க நாணயங்களை சரியாக மதிப்பீடு செய்து 2022 ஆம் ஆண்டில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | தொடர்புடைய நியமத்தின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்கள் 03 வருடங்களுக்கு அல்லது 05 வருடங்களுக்கு ஒரு தடவை மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டினுள் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 240,467,473 ஆன திறைசேரி மற்றும் ஏனைய அரச மானியங்கள் தொடர்பில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை இனங்காணுவதற்கும் அளவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் திருத்தங்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டின் போது சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (உ) | இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமம் 12 இன் பிரகாரம் அறுதியுறுதிக் காணிகள் மற்றும் குத்தகைக் காணிகள் நிதிக் கூற்றுக்கள் மூலம் வேறுபடுத்திக் காட்டப்படவில்லை | வினாவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிகாரசபையினால் குத்தகை அடிப்படையில் காணிகளை பெற்றுக் கொள்ளும் போது யட்டியாந்தோட்டை காணிக்கு உரியதாக | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்பதுடன் அதிகார சபையினால் மொத்தம் ரூபா 9,842,565 தொகையான 05 குத்தகைக் காணிகள் தொடர்பான நியமத்தின் பிரகாரம் முறையாக செய்யப்படவில்லை. | மாத்திரம் ரூபா 9,000 ஆன குத்தகை வாடகை செலுத்தப்பட்டுள்ளதுடன் ஏனைய 04 காணிகளுக்காக குத்தகை வாடகையொன்று செலுத்தப்படுவதில்லை. அதற்கமைய நியம இலக்கம் 12 இன் கீழ் காலக்கழிவு செய்தல் 2022 ஆம் ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் போது மேற்கொள்ளப்படும். | |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் முழுப் (100%) பங்குரிமையுடன் 2013 டிசம்பர் 18 ஆம் திகதி வீ.ரீ.ஏ. ஹோல்டிங் (பிரைவேட்) லிமிடட் என்ற பெயரில் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் கம்பனியாக பதிவு செய்யப்பட்டது. ஆயினும் 2013 டிசம்பர் 18 ஆம் திகதி முதல் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரை உரிய நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த வருமானம் மற்றும் செலவினங்களுக்குரிய பேரேட்டுக் கணக்குகள் தனித்தனியாக பேணிச் செல்லப்படுவதுடன் கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளவாறு இறுதிக் கணக்கு கூற்றுக்களில் செயற்பாட்டு கூற்றுக்கள் மற்றும் அதற்குரிய பதிவுகளில் தனித்தனியாக பதிவு செய்வதற்கு 2022 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 51(4)(a) பகுதியில் பங்குவழங்கல் சான்றிதழ் பிரகாரம் ரூபா 10 பெறுமதியான பங்குகள் தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட மையால் ஏற்புடைய கம்பனியின் தகவல்களை துரிதமாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டிக் காணப்படல். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 03 சொத்து தொகுதிகளுக்குரிய ரூபா 25,775,505 கூட்டுத்தொகையான சொத்துக்களுக்காக | இதற்காக உரிய சீராக்கங்கள் 2022 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது மேற்கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பெறுமானத்தேய்வு சரியாக கணிப்பிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத்தேய்வு இரு தடவை கணிப்பிடப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 2,943,759 மற்றும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 9,221,628 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,943,759 இனால் மற்றும் திரண்ட நிதியத்தில் வரவு மீதி ரூபா 9,221,628 இனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ரூபா 198,889,054 மீள்மதிப்பீட்டு பெறுமதியுடைய சொத்துக்கள் அரசின் மூலதன மானியங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டு முழுமையாகத் தேய்விடப்பட்டு பிற்போடப்பட்ட வருமானமாக பதிவழிக்கப்பட்டுள்ள போது அந்த சொத்துக்களின் மீள் மதிப்பீட்டின் பெறுமதியின் அடிப்படையில் பெறுமானத் தேய்விடப்படும் போது அதற்கு சமமான அளவினால் தொடர்ந்தும் பிற்போடப்பட்ட வருமானமாக கணக்கு வைக்கப்படுகின்ற காரணத்தினால் ஆண்டிற்குரிய நட்டம் ரூபா 18,780,149 இனாலும் திரண்ட நிதியத்தின் வரவு மீதி ரூபா 76,820,627 இனாலும் குறித்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 13 இன் பிரகாரம் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் 02 அடிப்படைகளும் கருத்தில் கொள்ளப்படும். அதாவது சந்தைக் கிரயம் மற்றும் விலைக்கிரயம் ஆகியன ஆகும். அதற்கமைய குறித்த சொத்துக்களின் கொள்வனவு செய்த ஆண்டு அல்லது கிரயம் குறிப்பிடப்படாமலே மேற்படி சந்தைக் கிரயம் முறைமை பின்பற்றப்படும். இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 1996 ஆம் ஆண்டிலிருந்து சொத்துக்கள் மற்றும் தொழில் திணைக்களத்திலிருந்து சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களும் காணப்படுகின்றமையால் அதன் போது கொள்வனவு செய்த காலப்பகுதியில் குறிப்பிடுதல் சிரமமாகும். அதற்கமைய மேற்படி முறைமை பின்பற்றப்படுகின்றது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான கணிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டினுள் அகற்றப்பட்ட சொத்துக்களுக்குரிய கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு குறித்த கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டு சொத்துக்கள் அகற்றப்பட்டமையினால் இலாபத்தினை இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு பதிலாக சொத்துக்களை விற்பனை செய்தமையால் கிடைத்திருந்த ரூபா 2,030,410 ஆன தொகை ஏனைய வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டு முதல் சொத்துக்களை சரியாக இனங்கண்டு ஏலமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கு வைக்க வேண்டும். |
| (உ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 4,496,902 தேறிய பெறுமதியுடைய 24 மோட்டார் வாகனங்கள் அவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த மீள் மதிப்பீட்டில் கைவிடப்பட்டிருந்ததுடன் அதனை திருத்துவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த 24 மோட்டார் வாகனங்களை பயிற்சி உபகரணங்களாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. குறித்த மோட்டார் வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்வதற்கு அமைச்சினால் மோட்டார் வாகன ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. | மோட்டார் வாகன வகுப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த 24 மோட்டார் வாகனங்கள் தற்போது பயன்படுத்தப்படும் பிரிவினை இனங்கண்டு சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 04 பட்டோலையின் 288 பொது மாதிரி | அதிகார சபையின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 7,971,202,923 தேறிய பெறுமதியுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை | அதிகாரசபையினால் Busy மென்பொருளின் ஊடாக நிலையான சொத்துக்களின் பதிவேடொன்று நாளதுவரையாக பேணுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப் படுவதுடன் அதற்கமைய எதிர்காலத்தில் இந்த பிரச்சினை தீர்க்கப்படும். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 1646 | ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படும் குழாம் வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 123 குழாம் வாகனங்கள் தொடர்பில் 2019 ஸனவரி மாதம் முதல் 2021 திசெம்பர் வரை ஏற்புடைய நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த அனைத்து வாகனங்களினதும் எரிபொருளுக்காக குறித்த காலப்பகுதிக்காக | 2020, 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய ஓட்டக் குறிப்புக்களின் ஒரு பகுதி 2022.03.29 ஆந் திகதியளவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய அனைத்தும் எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புடைய நியமங்களுக்கு அமைய உரிய திகதிகளுக்கு முன்னர் ஓட்டக் குறிப்புக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 28,280,105 செலவிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதிய 05/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | துறைசார் நிபுணத்துவ அபிவிருத்தி செயற்திட்டத்தில் அடிப்படைச் சம்பளத்தின் 1/3 படிகள் பெற்றுக் கொள்ளும் 08 உத்தியோகத்தர் களுக்காக சுற்றறிக்கைக்கு முரணாக 2017 ஆம் ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 1,669,516 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | துறைசார் திறன்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 1/3 படிகள் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்கள் 08 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் 2022 யூன் மாதம் முதல் 08 தவணைகளில் அறவிடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 03/2003 மற்றும் 05/2013 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை | அதிகார சபையின் ஒவ்வொரு உத்தியோகத்தரும் ஒவ்வொரு மாவட்டங்களில் கடமைகளில் உச்ச சேவைக்காலமான 06 வருட காலம் மாத்திரம் காணப்பட வேண்டிய போதிலும் அதற்கமைய 06 வருடங்களை விட அதிக சேவைக்காலம் உடைய உத்தியோகத்தர்கள் தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | இந்த அதிகார சபையின் இடமாற்றல் நடைமுறைகளை கட்டாயமாக ஊழியர் ஒருவர் குறித்த சேவைக்காலம் நிறைவு செய்யப்பட்ட பின்னர் இடமாற்றம் செய்யப்படாத காரணத்தினால் அதனை திருத்தியமைப்பதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது குறித்த திருத்தங்களை தயாரித்து பணிப்பாளர் சபைக்கு முன்மொழிவுகளை சமர்ப்பித்து மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உள்ளக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க இடமாற்றல் கொள்கை நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 1,050,040,402 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 989,421,893 அதற்கமைய நிதிப் பெறுபேறுகளில் ரூபா 60,618,509 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு அரசின் மீண்டெழும் மானியங்கள் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கான பங்களிப்பு மதிப்பீடு செய்யப்பட்ட போது வாழ்க்கைச் செலவுப் படி கருத்திற் கொள்ளப்படாமை காரணமாக 2019 ஆம் ஆண்டு செலுத்த நேரிட்ட ரூபா 7,898,073 மேலதிகக் கட்டணத்தை தொடர்புடைய தரப்பிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அந்த நிலைமை கவனயீனமாக இடம்பெறவில்லை என்பதுடன் இந்த படிகள் இடைக்கால படியொன்றாக தவறுதலாக வரைவிலக்கணப் படுத்தப்பட்டமையால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. பணிப்பாளர் சபைக்கு விடயங்களை முன்வைத்து அங்கீகாரத்தை பெற்று இந்தக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கவனயீனமாக செயற்பட்ட காரணத்தால் மேலதிக கட்டணம் செலுத்த நேரிட்டது. ஆகவே ஏற்புடைய பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் களை இனங்கண்டு அவர்களிடம் அத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| கொழும்பு தொழில் பயிற்சி நிலையத்தில் மற்றும் கம்பஹா கைத்தொழில் கல்லூரியினை நிர்மாணிக்கும் போது கொரியா கடன் செயற்திட்டத்தில் 2019 ஆம் ஆண்டில் அதிகார சபையின் கீழ் காணப்படும் ஒறுகொடவத்த கொரியன் டெக் நிறுவனத்திற்கு கிடைத்திருந்த ரூபா 15,743,838 ஆன 157 உபகரணங்கள் எதுவித பயன்பாட்டிலும் ஈடுபடுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன் ரூபா 1,784,794 பெறுமதியான 07 உபகரணங்கள் செயழிலந்து காணப்பட்டன. அவ்வாறே இந்த நிறுவனத்திற்கு மருத்துவர் அல்லது தாதி பதவி அங்கீகரிக்கப்பட்டிராத போது ரூபா 3,500,000 பெறுமதியுடைய மருத்துவர்களால் | குறித்த உபகரணங்கள் குறித்த இடங்களில் உரிய முறையில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. செயலிழந்து காணப்பட்டுள்ள 07 உபகரணங்கள் தற்போது இலங்கையின் முகவர் நிறுவனமொன்றிற்கு அறிவித்து பழுதுபார்க்கப்பட்டுள்ள துடன் மருந்து வகைகள் மருத்துவ பரிந்துரை இல்லாது பயன்படுத்த முடியாததுடன் காயங்கள், வீக்கம் ஆகியவற்றிற்கு பயன்படுத்தக்கூடிய மருந்துகள் மாத்திரம் | அதிகார சபையின் தேவைகள் மற்றும் முன்னுரிமையின் ஒழுங்குமுறைக்கமைவாக ஆதனங்களை கைப்பற்றுதல் மற்றும் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளல் வேண்டும். வெளிநாட்டு கடன் நிதியம் மூலம் வழங்கியுள்ள உபகரணங்கள் பெரும்பா லானவை பயனற்று இருந்த துடன், அந்த |

| | | |
|---|---|---|
| பயன்படுத்தப்படும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் ஆகியன வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த மருந்துப் பொருட்கள் பயன்படுத்தப்படாது காலாவதியடைந்திருந்தது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உபகரணங்களை துரிதமாக பயன்படுத்து வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| களுத்துறை மாவட்ட தொழில் பயிற்சி நிலையத்தில் 2021 ஆம் ஆண்டில் 173 சந்தர்ப்பங்களில் சந்தை ஒப்பீட்டு விலை முறைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 11,776,318 கூட்டுத்தொகையான கொள்வனவுகளுக்குரிய பெறுகைகள் வழிகாட்டல்களுக்கு முரணாக வழங்குனர்கள் பதிவு செய்யப்படாமை, விலைக்கேள்வி திறக்கும் குழு நியமிக்கப்படாமை, முத்திரையிடப்படாத விலைக்கேள்விகளை கையேற்றல், தவறான கூறுவிலைகள் பட்டியல்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளல் போன்ற பாரியளவிலான விலகல்கள் அவதானிக்கப்பட்டன. | அவசர தேவைப்பாட்டுடைய செயற்பாடுகளில் கிடைக்கப் பெற்றிருந்த கூறுவிலைகளுக்கமைய கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் குறைபாடுகளை திருத்தி தயாரிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | அனைத்து கொள்வனவு களுக்கும் பெறுகைகள் வழிகாட்டி பின்பற்றப்பட்டு தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை குறைந்த விலையின் கீழ் கொள்வனவு செய்து பொருளாதார நலனை பெற்றுக் கொள்ள வேண்டும். |